1979 பிப்ரவரி 24]

செஞ்சி மருத்துவ மனை.

* வினா எண் 174 — திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி (தென்னாற்காடு மாவட்டம்) மருத்துவமனையில் உள்ள படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தக் கோரி விண்ணப்பம் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்.— (அ) மற்றும் (ஆ) செஞ்சி அரசினர் மருத்துவமனையிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் கோரிக்கை ஒன்று மருத்துவத் துறை இயக்குநரின் ஆய்வில் உள்ளது. இதுபற்றி கருத்துரு பெறப்பட்டவுடன் அரசு ஆய்ந்து முடிவெடுக்கும்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட்டிலாவது, படுக்கை எண்ணிக்கை அதிகப்படுத்தப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : செஞ்சி அரசு மருத்துவ மனையில் தற்போது 28 படுக்கைகள் உள்ளன. செஞ்சி அரசினர் மருத்துவ மனையிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கான கோரிக்கை ஒன்று தென்னாற்காடு மாவட்ட மருத்துவ அதிகாரியிடமிருந்து மருத்துவத் துறை இயக்குநருக்கு வந்துள்ளது. மருத்துவப் பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் அவர்கள் நிதிப் பற்றாக்குறையினால் செஞ்சி மருத்துவ மனையை விரிவாக்கும் திட்டம் 1978–79 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்று கூறியுள்ளார். எனினும் செஞ்சி மருத்துவ மனையை விரிவாக்கும் திட்டத்தை 1979–80 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் பகுதி திட்டமாக எடுத்துக்கொள்வதற்காக தென்னாற்காடு மாவட்ட மருத்துவ அலுவலரிடமிருந்து விவரங்கள் கோரப்பட்டுள்ளன என்றும் அந்த விவரங்கள் கிடைத்ததும் அரசின் பரிசீலனைக்கு ஒரு செயற் குறிப்பு அனுப்புவதாகவும் கூறியுள்ளார். மருத்துவப் பணி குடும்பநலத்துறை இயக்குநரிடமிருந்து இது பற்றி செயற்குறிப்பு வந்த பிறகு அரசு தகுந்த

நடவடிக்கை எடுக்கும். மேலும், பிரிட்டிஷ் உதவித் திட்டத்தின் கீழ் கருத்தடை அறுவை சிகிச்சைக்காக செஞ்சி, அரசினர் மருத்துவ மனையில் ஆறு படுக்கைகள் கொண்ட பகுதி மற்றும் அறுவை மருத்துவ அரங்கம் ஒன்று 96,095 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாளில் தென்னாற்காடு மாவட்ட மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு இக்கட்டிடம் அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்தப்படுகிறது.

சிதம்பரம் பழைய மருத்துவமனைக் கட்டிடம்.

* வினா எண் 175—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் நகரில் உள்ள பழைய மருத்துவமனை கட்டிடத்தை சிதம்பரம் நகராட்சி, கல்விக்கூடத்திற்குப் பயன்படுத்தக் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :(அ) சிதம்பரம் நகராட்சி பழைய மருத்துவமனைக் கட்டிடத்தையும் மருத்துவர் அலுவலர் குடியிருப்பையும் நகராட்சி அலுவலகமாக பயன்படுத்தக் கேட்டுக் கொண்டுள்ளது. கல்விக்கூடமாக பயன்படுத்தக் கேட்கவில்லை.

(ஆ) சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவப் பிரிவுகளை கொண்ட மருத்துவ மனையை இக்கட்டிடத்தில் துவக்கலாம் என செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகராட்சி எல்லையிலுள்ள இந்த மருத்துவ மனை புது மருத்துவமனைக்கு மாற்றிய பிறகு கடந்த ஒன்றரை ஆண்டுகளாகியும் பழைய மருத்துவமனை கவனிக்கப்படாமல், இதிலுள்ள எலக்டிரிக் சாமான்கள் எல்லாம் கடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இந்த இடம் சமூக விரோதிகளின் இருப்பிடமாக ஆகிக் கொண்டு வருகிறது. இந்தக் கட்டிடத்தை நகராட்சியின் கீழ் கல்விக்கூடமாக உபயோகித்துக்கொள்ள நகராட்சிக்கு அரசாங்கம் கொடுக்க முன்வருமா என்று கேட்டுக்கொள்வதுடன் இந்த கட்டிடத்தின் இடத்தை குடியிருப்புகளாக மாற்ற வேண்டும் என்று கோரி வேறு இலாக்கா கேட்டு இருப்பதாக அரசுக்கு தகவல் வந்திருக்கிறதா? அப்படியென்றால் அதன் மீது அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.